நாள்: 16.09.2025

O.S. No. 81/2022

பி.வா.சா.1

பெயர்: உதயக்குமார் , த/பெ. சீனிவாசன்

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் விவசாயம் பார்த்து வருகிறேன். நான் வேறு எதும் தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. எனக்கு சொந்த ஊர் எது என்றால் வேப்பத்தாங்குடி. 1ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான். வாதி எந்த புலஎண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் புலஎண் 82/13 ஆகும். நான் பாரத பிரதமர் வீடு கட்டும் குடியிருப்பு திட்டத்தின் கீழ் என் மனைவி 1ம் பிரதிவாதி பெயரில் விண்ணப்பம் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி நான் விண்ணப்பம் செய்த விண்ணப்பத்தின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. எந்த புலஎண்ணில் வீடுகட்டுவதற்காக மேற்படி திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்திருந்தேன் என்றால் புலஎண் 82/1B சொத்துக்கு ஆகும். புலஎண் 82/2B சொத்திற்கும் சேர்த்து விண்ணப்பம் கொடுத்தேனா என்றால் இல்லை. புலஎண் 82/1B க்கு மட்டும் தான் கொடுத்தேன்.

மேற்படி புலஎண் 82/1B யார் பெயரில் உள்ளது என்றால் என் தகப்பனார் சீனிவாசன் பெயரில் உள்ளது. மேற்படி புலஎண் 82/1B-க்கு என் அப்பா பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். குடியிருப்பு திட்டத்தின் கீழ் எந்த இட்த்தில் வீடு கட்டுவதற்கு 1ம் பிரதிவாதிக்கு அனுமதி கொடுக்கப்பட்டது என்றால் புலஎண் 82/1B க்கு அனுமதி கொடுக்கப்பட்டது. புலஎண் 82/1B ல் தான் நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். புலஎண் 82/1B ல் நான் வீடு கட்டியுள்ளேன் என்பதற்கு ஆதரவாக நான் நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த சொத்து என் தகப்பனார் பெயரில் உள்ளது. அதற்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை.

புலஎண் 82/1 3 காலிமனையாக உள்ளதா என்றால் வீடு உள்ளது. புலஎண் 82/1B மற்றும் புலஎண் 82/13 ஆகியவற்றில் தலா இரண்டு RCC வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டுவீடுகளும் என்னால் பாரத பிரதமர் குடியிருப்பு

திட்டத்தின்கீழ் கட்டப்பட்டது என்றால் இல்லை. புலஎண் 82/13 உள்ளது நான் சொந்தமாக கட்டியது. புலஎண் 82/1B ல் உள்ளது அரசு திட்டத்தின் கீழ் கட்டியது.

புலஎண் 82/13 என்பது யாருக்கு சொந்தமான சொத்து என்றால் பிரபுராம் என்பவர் அவருடைய பாட்டி ரத்தனத்தம்மாள் மறைந்த பிறகு எனக்கு எழுதிகொடுத்துள்ளார். ரத்தனத்தம்மாளுக்கு புலஎண் 82/13 சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் எனக்கு தெரியாது. ரத்தனத்தம்மாள் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது பிரபுராம்க்கு தான் தெரியும். ரத்தனத்தம்மாள் பிரபுராமுக்கு எழுத்துமூல ஆவணம் எதும் எழுதிவைத்துள்ளாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. பிரபுராம் புலஎண் 82/13 சொத்தைபொருத்து எனக்கு எழுதிகொடுக்க உரிமையற்றவர் என்றால் சரியல்ல.

பிரபுராமுக்கு புலஎண் 82/13 சொத்தை கிரய ஒப்பந்தம் மூலம் பெற்றதற்காக நான் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூ.30,000 பிரபுராமிற்கு கொடுத்தேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.2 ஆவணத்தில் ரூ.30,000 பிரபுராமுக்கு தொகை கொடுத்ததாக குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ல் சுத்த கிரய சாசன ஒப்பந்தம் என தலைப்பு எழுதப்பட்டு ஆவணத்தின் முதல் பகுதி உறுதிமொழி பத்திரம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ 2 ஆவணத்தின் புலஎண் 82/13 சொத்து எனது அனுபவத்தில் இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

பி.சா.ஆ 2 ல் சொல்லப்பட்டுள்ள பிரபுராம் பெயரில் உள்ள பவர் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பி.சா.ஆ 2 ஆவணத்தின் அடிப்படையில் தான் தாவா புலஎண் 82/13 என் அனுபவத்தில் இருந்துவருவதாக நான் சொல்கிறேன் என்றால் சரிதான். பி.சா.ஆ 2 ஆவணத்தில் 40 ஆண்டுகளாக என்குடும்பத்தார் அனுபவத்தில் தாவா சொத்து இருந்து வருகிறது என்பது குறித்து கூறப்படவில்லை என்றால் சரிதான்.

என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ 1 பட்டா ஆவணத்தில் ரத்தனத்தம்மாளின் கணவர் பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். ரத்தினத்தம்மாளுக்கு பிரபுராம் வாரிசு என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ 1, 2 முறையே நத்த மனைவரி பட்டா மற்றும் தூய சிட்டா ஆகியவற்றில் புலஎண் 82/13 சொத்து கோதண்டபாணி மகன் சிவசுப்ரமணியன் பெயரில் உள்ளதாக தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நீதிமன்ற ஆணையர் மூலமாக சர்வேயர் தாவா புலஎண் 82/13 அளவீடு செய்தார் என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீ.சா. ஆ 2 சர்வேயர் அறிக்கையில் புலஎண் 82/13 பட்டாதாரர்கள் பெயர் குறித்து திருத்தத்திற்கு முன் பட்டாதாரர் பெயர் ரத்தனத்தம்மாள் என்றும் திருத்ததிற்கு பின் சிவசுப்ரமணிய கோனார் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.09.16 06:36:52 +0530